வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4379/ஆ4/2025 நாள்: 30.12.2025

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –2025–2026 மேல்நிலை இரண்டாம் ஆண்டு மேல்நிலை முதலாமாண்டு (Arrear) பொதுத் தேர்வு – மாணவர்களது பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் கால அவகாசம் வழங்குதல் –சார்பு.

பார்வை : 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012770/ எச்.1/2025 நாள் 31.10.2025 மற்றும் 03.12.2025
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் : 31.10.2025 மற்றும் 03.12.2025
3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012770/ எச்.1/2025 நாள் 29.12.2025

===============

பார்வை 1–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க நடைபெறவுள்ள 2025–2026 மேல்நிலை இரண்டாம் ஆண்டு /மேல்நிலை முதலாமாண்டு (Arrear) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் பெயர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள 21.10.2025 முதல் 12.112025 வரையிலான நாட்களிலும் மற்றும் 04.122025 / 05.12.2025 ஆகிய நாட்களிலும் கால அவகாசம் வழங்கப்பட்டது.

மேலும் பார்வை 3–ல் காணும் செயலமுறைகளில் தற்போது, பள்ளி மாணவர்களின் பெயர் பட்டியலில் திருத்தங்கள்/சேர்க்கை/நீக்கம் மேற்கொள்ளும் பணி ஏதேனும் மேற்காண் கால அவகாசத்திற்கு பிறகு பள்ளிகளில் இருப்பின் மாணவர்களின் நலன் கருதி அவற்றை 30.122025 முதல் 31.12.2025 **தேதிக்குள் வேலூர், கல்புதூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்** அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம். //
முதன்மைக்கல்விஅலுவலர்
வேலூர்

பெறுநர்,

அனைத்து வகை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம் தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது .

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது.